திரு. வை. சுவாமிநாதன் : திருச்சி, தென் மதராஸ் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷனை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் உத்தேசம் உண்டா ? இந்த அனல் மின்சாரத்திற்குத் தேவையான பொருள்கள் நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா ? அல்லது வேறு நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றனவா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தனியாரிடத்திலிருக்கும் மின்சார நிறுவனங்களை மெல்ல மெல்ல எடுத்துக்கொள்ளுவது என்ற திட்டம்தான். படிப்படியாக இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் மூன்று நிறுவனங்கள் எடுத்துக்கொள்ளப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. அதுபற்றிய நிலைமை களெல்லாம் முடிந்ததற்குப் பிறகு, படிப்படியாக வரும்போது, திருச்சி போன்ற மற்றவைகளையும் எடுத்துக் கொள்ளுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். இப்பொழுது தஞ்சையில் இருக்கும் நிறுவனங்களை எடுத்துக்கொள்ளுகிற சூழ்நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. அதுபற்றியும் இப்பொழுது "ரிட்"-க்குப் போயிருக்கிறார்கள். அதுபற்றி முடிவு தெரிந்ததற்குப் பிறகு, அதற்கான நடவடிக்கைகளில் நாம் முற்பட வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 154, 155 எண்களுள்ள வினாக்கள் தள்ளி வைக்கப்படுகின்றன. இப்பொழுது 156 எண்ணுள்ள வினா எடுத்துக்கொள்ளப்படும்.

வேளாண்மைத்துறை அதிகாரிகள்

*156 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாய இலாகாவில் சொந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை அதே மாவட்டத்தில் கெஜட் பதிவுள்ள அதிகாரிகளாக நியமிக்கப்படக் கூடாது என அரசாங்கம் விவசாய நெறியாளருக்கு ஏதேனும் உத்தரவு பிறப்பித்துள்ளதா ?

(இ) ஆம் என்றால் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள்

*157 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு சட்டக் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் எத்தனை மகளிர் கூட்டுறவு பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன ?

(இ) மேலும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலையை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசினரின் பரிசீலனையிலுள்ளதா ?

(உ) ஆமெனில், அவைகளுள் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை இடம் பெறும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இருபத்தாறு.

(இ) இல்லை—எந்தப்பகுதியிலும் மகளிர் கூட்டுறவு பண்டகசாலை ஏற்படுத்துவதற்கான சூழ்நிலை ஏற்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள் பண்டகசாலையை ஆரம்பிக்க முன்வந்தால் இதுபற்றிக் கூட்டுறவு பதிவாளர்கள் கவனிப்பார்கள்.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதுவரை ஆரம்பிக்கப் பட்டுள்ள மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் லாபம் ஏற்பட்டுள்ளதா? அல்லது நட்டத்தில் ஏதேனும் வேலை செய்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 26 மகளிர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் இருக்கின்றன. எந்தக் கூட்டுறவு பண்டகசாலைபற்றிக் கனம் உறுப்பினர் விவரம் தெரிந்துகொள்ள விரும்புகிறார் என்று குறிப்பிட்டு எழுதியனுப்பினால், அதுபற்றி விசாரித்துத் தகவல் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மருத்துவத் துறை அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளின் பேரில், வினா எண் 158, நாளைவரை தள்ளி வைக்கப்படுகிறது.

பனங்கருப்பட்டியிலிருந்து சர்க்கரை உற்பத்தி

***159 வினா.—திரு. டி. மார்ட்டின் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உடன்குடியில் பனங்கருப் பட்டியிலிருந்து சர்க்கரை செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவும் உத்தேசம் ஏதேனும் தற்சமயம் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) தற்சமயம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு டி. மார்ட்டின் : நெல்லை மாவட்டத்தில் சாத்தான்குளம், உடன்குடி வட்டாரங்களில் ஏராளமான பனை மரங்கள் இருக்கின்ற காரணத்தாலும், இலங்கையிலிருந்து பனைவெல்லத் தொழில் செய்து கொண்டிருந்தவர்கள் இங்கு வர இருக்கும் நிலையினாலும், அங்கே இந்த விதமான சர்க்கரை ஆலையொன்றை அரசு லாப நோக்கத்தோடே நடத்தக் கூடிய வாய்ப்பு இருக்கும் காரணத்தாலும், அதை நடத்தக்கூடிய வாய்ப்பினை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பொதுவாக, பனங்கருப்பட்டிலிருந்து சர்க்கரை செய்யும் முறை எதுவும் நம்முடைய தமிழகத்தில் தற்போது நடைமுறையில் இல்லை. ஆனால், பனஞ்சாறிலிருந்து, அதாவது பதனீரைக் கொண்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. கூட்டுறவு சம்மேளனங்களின் அமைப்பு முறைப்படி, அப்படிப்பட்ட கூட்டுறவு அமைப்பு முறைகளுக்கான நியதிகளுக்குட்பட்டு செயல்பட்டு வருகின்றன. அப்படிப் பட்ட வேண்டுகோள் ஏதேனும் வந்தால், அதைப் பரிசீலிக்கலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH:—I wish to know from the Hon. Minister for Local Administration whether applications for starting sugar mills were received from Hosur Taluk and, if so, what the position about them is.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சர்க்கரை ஆலைக்கும் எனக்கும் தொடர்பு இல்லை. ஆகவே, அதுபற்றிய முறையீடுகள் ஏதும் வந்ததாக எனக்குத் தெரியவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : பதனீரிலிருந்து சர்க்கரை உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைகள் எங்கெங்கே இருக்கின்றன ? அவை லாபத்தில் வேலை செய்கின்றனவா ?